செ. கு. எண்: 135

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 6.6.2013

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சோத்துப்பாக்கம் கிராமம் அருகே 22.5.2013 அன்று சென்னையிலிருந்து திருவண்ணாமலை சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து பள்ளத்தில் விழுந்து விபத்திற்குள்ளானதில் பேருந்தில் பயணம் செய்த திருவண்ணாமலை மாவட்டம், தட்டாம்பட்டு வட்டம், வானாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கெடியரசு என்பவரின் மகன் குழந்தை லோகராஜ் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தான் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், பரம்பூர் கிராமம், அருகே 24.5.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த குடுமியான்மலையைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் மோகன் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த திரு. அழகப்ப முதலியார் என்பவரின் மகன் சேகர் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அடையக்கருங்குளம் கிராம மயானத்தில் 24.5.2013 அன்று கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, எதிர்பாராமல் கட்டடத்தின் மேற்கூரை சரிந்து கீழே விழுந்ததில், அப்போது கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த அம்பாசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் என்பவரின் மகன் சுப்பையா மற்றும் சிவந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பையா என்பவரின் மகன் அழகு ஆகிய இருவரும் கட்டட இடிபாடுகளில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தைலாவரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மனைவி திருமதி சகுந்தலா 25.5.2013 அன்று தைலாவரம் பேருந்து நிலையம் அருகில் சாலையைக் கடக்கும் போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த குழந்தை லோகராஜ், மோகன், சேகர், சகுந்தலா மற்றும் கட்டடம் கட்டும் பணியின் போது உயிரிழந்த சுப்பையா மற்றும் அழகு ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்துகளில் உயிரிழந்த குழந்தை லோகராஜ், மோகன், சேகர், சகுந்தலா, சுப்பையா மற்றும் அழகு ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**